அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 09 செப்டம்பர் 2024 தனி பிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா - ரூ. 200/-
VOl : 10 Issue No : 09 September 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-

நல்ல சுகத்துடன் இருக்கிறேன்!

நான் கடந்த 3 வருடமாக மனநிலை பாதிக்கப்பட்ட தற்கான சிகிச்சை எடுத்து அதற்கான மாத்திரைகளை சாப்பிட்டு வந்தேன். கடந்த வருடம் கூட்டத்திற்கு வந்தபொழுது **Dr. ஜேன் ஜாஷ்வா** அவர்கள் மாத்திரையை நிறுத்தும்படியாக நாம் ஜெபிப்போம் என சொல்லி எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் மருத்துவரை சந்தித்தப் பொழுது, மருத்துவரும் இனி கொஞ்சம் கொஞ்சமாக மாத்திரையை நிறுத்திவிடலாம் என சொல்லி மாத்திரையை குறைத்து கொடுத்தார்கள். கடந்த வருடம் 2023 ஜூலை மாதத்தில் மாத்திரையை முழுவதுமாக நிறுத்தி விட்டேன். மாத்திரை நிறுத்தி ஒரு வருடமாக நான் நன்றாக இருக்கிறேன். எனக்காக ஜெபித்த சகோதரிக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன். நல்ல சுகத்துடன் பாதுகாத்து வருகிற கர்த்தரை துதிக்கிறேன்.





– திருமதி. பாக்கியலெட்சுமி, இலால்குடி.

பாவத்திலிருந்து விடுதலை கிடைத்தது!

நான் 10–ம் வகுப்பு தேர்வில் 4 பாடத்தில் தோல்வியடைந்தேன். அதன்பின் மீண்டும் தேர்வு எழுதி தேவ கிருபையால் வெற்றி பெற்றேன். 12–ம் வகுப்பு முடித்து இளநிலை,முது நிலை படிப்பை முடிக்கவும் கர்த்தர் உதவி செய்தார். நான் Ph.D பண்ணிக்கொண்டிருந்தப்பொழுது Ph.D முடிப்பதில் அதிக தடையாக இருந்தது. என் கஷ்டத்தைப் பார்த்து என் அம்மா கோயம்புத்தூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு என்னை அழைத்து வந்தார்கள். செய்தி முடிந்து ஜெப நேரத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னிடம், உனக்கு எதற்காக நான் ஜெபிக்க வேண்டும் என கேட்டார்கள். நான் Ph.D முடிக்க தடையாக இருக்கிறது என சொன்னேன். உடனே ஐயா கேட்டார்கள் உனக்கு 2 வருடமாக இருக்கிற வயிற்று வலி நீங்க வேண்டாமா என கேட்டார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உண்மை யிலேயே நான் 2 வருடங்களாக வயிற்று வலியினால் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தேன். நாங்கள் சொல்லாமலேயே ஐயாவிற்கு எப்படி தெரிந்தது என ஆச்சரியப்பட்டோம். ஐயா எனக்காக ஜெபித்து அனுப்பினார்கள். அன்றிலிருந்து வயிறு வலி நீங்கியது. Ph.D முடிக்க கர்த்தர் ஒத்தாசை செய்தார். அதன்பின் நல்ல வேலை கிடைத்து மாதம் 2 இலட்சம் ரூபாய் சம்பளத்தில் ஆண்டவர் என்னை உயர்த்தி வைத்திருந்தார்.

ஒரு சில வருடங்களில் என் அம்மா இறந்துவிட்டார்கள். அதனால் தனிமையில் இருந்தப்பொழுது பலவிதமான பாவ பழக்கங்களுக்கு அடிமை ஆகிவிட்டேன். அதற்காக பல முயற்சிகள் செய்தும் என்னால் பாவத்தை விடமுடியவில்லை. பாவ வாழ்விலிருந்து வெளியே வருவதற்காக நான் பெங்களூரில் செய்த வேலையை விட்டுவிட்டு திருச்சிக்கு வந்தேன். திருச்சியில் உள்ள கல்லூரியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்திருந்து கடைசியில் உட்கார்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். தேவ வல்லமை எனக்குள் இறங்கியது. என் பாவங்களை கண்ணீரோடு ஆண்டவரிடம் அறிக்கை செய்தேன். அன்றிலிருந்து எனக்கு எந்தவிதமான பாவ சிந்தனைக் கூட வரவில்லை. என்னை தம் இரத்தத்தால் மீட்டுக்கொண்ட கர்த்தரை துதிக்கிறேன்.

– Dr. எபினேசர், திருச்சி.

dranandastira@mojindia.org

அன்பரின் ஊழியம்

♦ மலர் : 10 ♦ செப்டம்பர் 2024 ♦ இதழ் 9

உங்கள் ஆசிரியரிடமிருந்து...

Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே! வாலிப தம்பி, தங்கைகளே! ஏகச்சக்ராதிபதியும், ராஜாதி ராஜாவுமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவின் மீதும், அவர் எங்களுக்கு தந்த ஊழியத்தின் மீதும் அழியாத அன்பு கொண்டு ஜெபிக்கின்ற, உதவுகின்ற உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே மேன்மேலும் அதிகமாக ஆசீர்வதிப்பாராக!

தேவனுடைய அளவற்ற கிருபையும், தயவும், அன்பும், பாதுகாப்பும், மிகுந்த மனதுருக்கமும் இன்றும் என்றும் உங்களோடும், உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரோடும் இருப்பதாக!

அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன், அவன் தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பான். ஏசாயா 22:23. நீங்களும்கூட உங்கள் வேலை ஸ்தலத்தில் அல்லது குடும்பத்தில் ஒதுக்கப்பட்ட நிலையில் பலவிதமான கஷ்டங்களை சந்தித்துக்கொண்டு இருக்கலாம். சோர்ந்து போகாதீர்கள். மேற்கண்ட வசனத்தின்படி கர்த்தர் உங்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைப்பார். இன்றைக்கு பணக்காரர்கள், ஏழைகள், படித்தவர், படிக்காதவர் என பல வேறுபாடுகள் இருந்தாலும், கர்த்தர் ஏழை, எளியவர்களையும், ஒடுக்கப்பட்டவர்களையும் தான் தாவீதைப்போல உயர்த்தி வைத்து மகிழ்கிறார்.

நம்நாட்டில் உள்ள பெண்களின் பாதுகாப்பிற்காக விசேஷமாக ஜெபியுங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் பிள்ளைகள் வெளியில் செல்வதற்கு முன்பாக தலையில் கை வைத்து ஜெபித்து அனுப்புங்கள். மறக்காதீர்கள். கர்த்தர் தாமே உங்கள் பிள்ளைகளை பத்திரமாக பாதுகாப்பார்.

உங்கள் குடும்பங்களில் உள்ளவர்கள் கிறிஸ்துவின் ஒளியினிடத்தில் வரும்படி அதிக ஊக்கமாய் ஒரு சிலர் ஜெபிக்கிறீர்கள். உங்கள் ஜெபம் ஒருபோதும் வீண் போகாது. சீக்கிரமாய் கர்த்தர் உங்கள் குடும்பத்தினரை இரட்சிப்பார். (1தீமோ.2:4)

செப்டம்பர் மாதம் நடைபெறயிருக்கும் நாகர்கோவில், குற்றாலம், விருதுநகர், திருச்சி மற்றும் சென்னை கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். ஒவ்வொரு கூட்டமும் விசுவாசத்திலேயே நடைபெறுகிறது. உங்களுடைய ஜெபமும், அன்போடு கொடுக்கிற காணிக்கைகளையும் கொண்டுதான் ஆங்காங்கே கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகிறது. ஒவ்வொரு

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

கூட்டத்திற்கும் உதவி செய்கிற மக்களை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! பரலோகத்தில் அவர்கள் பலன் பெருகும்படி கர்த்தர் அநுக்கிரகம் செய்வார்.

இந்த மாதத்தில் காலாண்டுதேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக ஊக்கமாய் ஜெபிக்கிறோம். வெளிநாடுகளில் படிக்கின்ற மற்றும் பணிபுரிகின்ற உங்கள் உறவினர்கள், பிள்ளைகளுக்காக அதிகமாக ஜெபிக்கிறோம். வியாதியின் அகோரத்தினால் துயரப்படும் ஒவ்வொருவரையும் கர்த்தர் சுகமாக்குவாராக! கடன் பாரங்கள், குடும்ப தகராறுகள், குடும்பத்தில் பிளவுகள் அனைத்தையும் நீக்கி மெய்யானவழியில் உங்களை நடத்துவாராக! எல்லாவிதமான பேராபத்துகளுக்கும் தப்பி உன்னதமானவரின் செட்டைகளின் கீழ் பாதுகாப்பாக இருக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

நாங்கள் உங்களுக்காக ஜெபிப்பதுபோல நீங்களும் எங்களுக்காக, ஊழியத்திற்காக அதிகமாக ஜெபியுங்கள். விசேஷமாக கர்த்தருக்கு பயந்த உண்மையான அர்ப்பணிப்புள்ளவர்கள் வேலைக்கு வரும்படி ஜெபியுங்கள். இந்த மழை காலத்தில் கர்த்தர் தாமே உங்களை பாதுகாப்பாராக! (சங்கீதம் 20: 2–4; 21: 1–7)

கிறிஸ்துவின் பணியில்
Dr. ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org

இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

சங்கீதம் 34:9–10; நாகூம் 2:2; மல்கியா 3:10; எபேசியர் 1:3

அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

உறுதியான அன்பு
Steadfast Love

தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமானவர்களே, நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற இனிதான நல்ல நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

இந்த மாத தியானத்திற்கு ஆண்டவர் உங்களுக்கு கொடுத்துள்ள தலைப்பு உறுதியான அன்பு. இன்றைக்கு சிறுகுழந்தை முதல் வயது முதிர்ந்த பெரியவர்கள் வரை அனைவருக்குமே அன்பு தேவைப்படுகிறது. அன்பில்லாத இடத்தில் மனிதர்கள் அன்பை தேடிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையான அன்பு உறுதியான அன்பு நம் கர்த்தரிடம் மட்டும் இருக்கிறது என்பதையே இந்த மாத செய்தியின் வாயிலாக அறிய இருக்கிறோம்.

தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோவான் 4:8. இந்த அதிகாரம் முழுவதையும் நீங்கள் வாசித்துப் பார்க்கும்பொழுது "அன்பு வெளிப்பட்டது, அன்பு உண்டாயிருக்கிறது அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்" என தேவ அன்பைக்குறித்து எழுதப் பட்டிருக்கிறது. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16-ம் வசனத்தில் தேவன் நம்மேல் வைத்த அன்பு எவ்வளவு என சொல்ல முடியாத அளவைத் தாண்டியே நம்மை அன்பு செய்து வருகிறார்.

ஆம், அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். எரேமியா 31:3-ல் ஆண்டவரின் அநாதி சிநேகம் (eternal love) எவ்வளவு விசேஷித்தமானது என சொல்லப் பட்டிருக்கிறது. அநாதி சிநேகம் என்பதை ஆங்கிலத்தில் everlasting love எனவும் சொல்வோம். அதாவது உலகம் தோன்றுவதற்கு முன்பே நம்மை நேசித்திருக்கிறார், தாயின் வயிற்றில் நாம் உருவாகும் முன்பே அவர் நம்மை அறிந்திருக்கிறார். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் வேதத்தின் மூலம் அறிந்துக்கொள்ள முடியும்.

திருமண ஆராதனையில் போதகர் திருமாங்கல்யத்தை ஆசீர்வதித்து மணமகன் கையில் கொடுப்பார். அதைப் பெற்றுக்கொண்ட மணமகன் மணமகளுக்கு அணிவிக்கும் பொழுது ஒரு வாக்கு கொடுப்பார். அது என்னவென்றால், உறுதியான நம்பிக்கைக்கும், அன்பிற்கும் அடையாளமாக இந்த திருமாங்கல்யத்தை உனக்கு நான் அணிவிக்கிறேன் என்பார். அவ்வாறு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒரு சிலர் திருமண வாழ்வில் உடைக்கப்பட்டும் போகிறது.

ஒரு சமயம் நண்பர் ஒருவரிடம் நான் உரையாடிக்கொண்டிருந்தேன். உரையாடலின் முடிவில் அவர்கள் கணவன் மனைவி இருவரும்

பிரிந்து இருப்பதை அறிந்தேன். அவர்கள் கிறிஸ்தவர்கள், நல்ல படிப்பு, நல்ல வேலை நல்ல ஆஸ்தி அனைத்தும் இருந்தும் சில வருடத்திற்கு பிறகு அவர்கள் பிரிந்து வாழ்கின்றனர். இவ்வாறே மனிதர்கள் கொடுக்கிற அந்த வாக்குறுதி தோல்வி அடைகிறது. ஆனால் தேவன் இங்கு ஒரு வாக்குறுதி கொடுத்துள்ளார். உங்கள் மேல் நான் வைத்துள்ள உறுதியான அன்பிற்கு ஒரு நாளும் தோல்வி இல்லை என சொல்கிறார். தேவ அன்பு ஒருநாளும் உங்களை கைவிடாது.

1 கொரிந்தியர் 13-ம் அதிகாரம் முழுவதும் அன்பை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 1 கொரிந்தியர் 13:13-ல் விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது, இவைகளில் அன்பே பெரியது என முடிகிறது. அந்த அன்பு தான் நம் தேவனின் உறுதியான அன்பு. தேவனின் உறுதியான அன்பு எங்கெல்லாம் பிரதிபலிக்கிறது என்பதை இங்கு சுருக்கமாக கூறுகிறேன்.

1. மீட்பில் அவரின் உறுதியான அன்பு (Steadfast Love in His Redemption)

பழைய ஏற்பாடு காலத்திலிருந்தே தேவனுடைய மீட்பின் காரியங்கள் துவங்கிவிட்டது. எப்படியென்றால் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்தப்பொழுது அவர்களை மீட்க, அவர்களை விடுதலையாக்க ஒரு மீட்பர் (Redeemer) தேவைப்பட்டது. அதற்காக இரு நபர்களை ஆண்டவர் தெரிந்துக்கொண்டார். முதலில் மோசே, இரண்டாவது யோசுவா. அவர்கள் மூலமாக ஒரு பெரிய மீட்பை ஆண்டவர் கொடுத்தார். பார் வோனின் அடிமைத்தினத்திலிருந்து விடுதலையை கொடுத்தார்.

நியாயாதிபதிகள் காலத்தில் தெபோராள், சிம்சோன், கிதியோனைக்கொண்டு இஸ்ரவேல் ஜனங்களுக்கு மீட்பை கொடுத்தார். இராஜாக்களின் காலத்தில் கர்த்தர் தாவீதைக்கொண்டு பெலிஸ்தர் களை தோற்கடித்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு மீட்பை கொடுத்தார். தீர்க்கதரிசிகள் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தவறும் பொழுதெல்லாம் அவர்களைக் கொண்டு எச்சரிக்கைச் செய்து பாவத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்டார்.

இறுதியில் தோன்றிய மீட்பர்தான் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. இவர் புதிய ஏற்பாடு காலத்தில் தோன்றிய சிறந்த ஒரு மீட்பர். பழைய ஏற்பாடு காலத்தில் எந்த ஒரு மீட்பரும் தன் இரத்தத்தைக் கொடுத்து மக்களை மீட்கவில்லை. ஆனால் புதிய ஏற்பாடு காலத்தில் இயேசு ஒருவரே தம் சொந்த இரத்தத்தையே சிந்தி மக்களை மீட்டுள்ளார். இயேசு ஒருவரே தன் ஜனத்தை மீட்பதற்காக அவருடைய சொந்த ஜீவனையே கொடுத்தார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8-ல் நாம் பாவிகளாயிருக்கும்பொழுது தேவன் தம் உறுதியான அன்பை வெளிப்படுத்தினார். இதைவிட சிறந்த தியாகம் நிறைந்த அன்பை நாம் வேறு எங்கும் பார்க்க முடியாது. ஒரு குற்றமு மில்லாத, மாசற்ற சிறந்த உறுதியான அன்பை இயேசு நமக்கு காட்டுகிறார். குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக் கிறீர்களே. 1 பேதுரு 1:19-ல் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டு இருக்கிறோம், விலையேறப்பெற்ற மீட்பை நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் கொடுத்து வைத்தவர்கள். இத்தகைய உறுதியான அன்பிற்கு சமமாக எந்த தாயின் அன்போ தகப்பனின் அன்போ, உறவினரின்

அன்போ பிள்ளையின் அன்போ கணவன் மனைவி அன்போ உறுதியாக இருக்க முடியாது.

அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1 யோவான் 1:7–ல் இயேசுவின் இரத்தம் மட்டுமே நம்மை பாவத்தி லிருந்து சுத்திகரிக்கிறது. நம்முடைய எல்லா பாவங்களையும் நீக்கி நம்மை விடுதலையாக்கு கிறது.

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக் கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். 1 யோவான் 3:16 அவர் தம்முடைய ஜீவனையே நமக்காக கொடுத்ததினாலே தேவ அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். இதுதான் தியாகமான அன்பு (sacrificial love). இந்த உறுதியான அன்பிற்கு ஈடு இணை எதுவும் இல்லை.

குடும்பங்களில் காணப்படுகிற நல்ல சகோதர சகோதரிகளின் அன்போ, நெருங்கிய கணவன் மனைவியின் அன்போ, உண்மையான நண்பர்களின் அன்போ எதுவாக இருந்தாலும் ஒரு காலகட்டத்தில் அந்த அன்பில், உறவில் விரிசல் உண்டாகும். உலகப்பிரகாரமான இந்த அன்பெல் லாம் இறுதிவரை உறுதியாக இருக்கும் என சொல்ல முடியாது. ஆனால் தேவனின் உறுதியான அன்பு எந்த விதத்திலும் நம்மை கைவிடாது. அந்த அன்பு நம்மை மீட்கிறது. அந்த மீட்பை பெறுவதற்கு உலகில் வேறு எந்த காரியமும் இல்லை. அவருடைய இரத்தத்தினால்தான் நமக்கு மீட்பு உண்டாகி யிருக்கிறது. (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. கொலோ.1:14 இயேசுவின் இரத்தம் இல்லையென்றால் மீட்பே இல்லை. அந்த இரத்தத்தினாலே நமக்கு பெரிய மீட்பு, பெரிய விடுதலை உண்டாகிறது.

ஆண்டவருடைய உறுதியான அன்பு எப்பொழுதும் இருக்கிறது. ஆனால் அவருடைய இரத்தத்தால் நீங்கள் கழுவப்பட்டு இருக்கிறீர்களா? தாயின் வயிற்றில் நீங்கள் உருவாகும் முன்பே உங்களை அவர் நேசித்திருக்கிறார். நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? அவரை நேசிக்கிறோம் என்று சொன்னால் அவருடைய இரத்தம் உங்களை கழுவியிருக்க வேண்டும், அவருடைய இரத்தம் உங்களை சுத்திகரித்திருக்க வேண்டும், அவருடைய இரத்தம் உங்களை பரிசுத்தமாக்கியிருக்க வேண்டும். அந்த இரத்தம் உங்களுக்கு மீட்பை கொடுத்திருக்க வேண்டும். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் நீங்கள் கழுவப்படும்பொழுது மட்டுமே புது வாழ்வு பெறுகிறீர்கள்!

2. நம்மை போஷிப்பதில் அவரின் உறுதியான அன்பு (Steadfast love in His Provision)

நம்மை போஷிப்பதில் நமக்கு ஆகாரம் கொடுப்பதில் தேவனுடைய உறுதியான அன்பு வெளிப்படுகிறது. நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணுகிற தேவன் தாமே ஒவ்வொரு நாளுக்கும் உரிய தேவைகளை அவர் சந்தித்து, நமக்கு ஆகாரம் கொடுத்து, நம்மை போஷித்து காத்து வருகிறார். இதுதான் உறுதியான அன்பிற்கு அடையாளமாக இருக்கிறது. இந்த அன்பு இயேசுவின் இரத்தத்தினால் உருவாகிவிட்டது. அவருடைய இரத்தம் நம்முடைய இரத்தத்தில் கலக்கிறது. பழைய ஏற்பாட்டில் இரத்தம் தான் உயிர் என சொல்லப்பட்டிருக்கிறது. மாம்சத்தின் உயிர்

இரத்தத்தில் இருக்கிறது, நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன், ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. லேவி.17:11 நம்முடைய இரத்தத்தில் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் கலந்து விட்டது. அந்த இரத்ததினாலே நமக்கு மீட்பு, அந்த இரத்தினாலே ஒரு உடன்படிக்கை, இரத்தத்தினால் நமக்கும் ஆண்டவருக்கும் இடையே தகப்பன் பிள்ளை என்ற உறவு ஏற்படுகிறது. இந்த உறவினால் உங்களை போஷிப்பதில் அவர் கருத்தாய் இருக்கிறார். மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது. சங்கீதம் 136:25-ன்படி உயிருள்ள எல்லா ஜீவ ராசிகளுக்கும் ஆண்டவர் ஆகாரம் கொடுக்கிறார் என்பதை அறிகிறோம். சங்கீதம் 147:9-ன்படி அவர் மிருக ஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக்குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார் என எவ்வளவு அருமையாக எழுதப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் போஷிக்கிறவர் உங்களை போஷிக்காமல் இருப்பாரா?

உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள், அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்.6:28-29 இவ்வாறு காட்டு புஷ்பங்களையும், தாவரங்களையும் போஷிக்கிறவர் எப்படி உங்களை போஷிக்காமல் இருப்பார்?

ஒரு முறை ஒரு சிறுவன் செடியில் உள்ள இலைகளை கையால் பறித்து கீழே போட்டுக் கொண்டிருந்தான். அதைக்கண்ட தாவரவியல் ஆசிரியர் அவன் காதை பிடித்து திருவினார். உடனே அவன் சொன்னான் சார், வலிக்குது என கத்தினான். "நீ அந்தசெடியின் இலைகளை பறிக்கிறாயே அவைகளுக்கு இப்படித்தான் வலிக்கும், அவைகளுக்கும் உயிர் இருக்கிறது" என்றார். ஆம். எல்லா ஜீவராசிகளுக்கும் எல்லா உயிரினங்களுக்கும் தேவனே ஆகாரம் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் பயணம் செய்தனர். அங்கு உணவு கிடைக்க எந்த சாத்தியமும் இல்லாத சூழ்நிலையில்தான் ருசியான தேனிலிட்ட பனியாரம் போன்ற மன்னாவை ஆண்டவர் கொடுத்தார். அத்துடன் வனாந்தரத்தில் காடைகள் வந்து இறங்கியது. கடவுள் கொடுப்பதற்கும் மனிதன் கொடுப்பதற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு. காலையில் மன்னா, மாலையில் இறைச்சி. பாறைக்குள் இருந்து தண்ணீர் வந்தது. இது தான் அவருடைய உறுதியான அன்பு. ஏனென்றால் அவர்களை கானான் தேசத்தில் கொண்டு போய் சேர்ப்பேன் என்ற வாக்கை அவர் நிறைவேற்ற வேண்டும்.

பஞ்ச காலத்தில் எலியாவை போஷித்தார். காகத்தை போஷிக்கிறவர் அதே காகத்தைக் கொண்டு மனிதனையும் போஷிப்பார். இது தான் அவருடைய உறுதியான அன்பு. அவரே நம்முடைய **Provision** ஆக இருக்கின்றார் அவரே நம் தேவைகளை சந்திக்கிறவராய் இருக்கிறார். அவர்தான் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

அன்பு தேவபிள்ளைகளே, நீங்கள் ஒரு வேளை நினைக்கலாம், நான் விரும்பிய காரியங்கள் எனக்கு கிடைக்கவில்லையே என்ன செய்வேன் என சோர்ந்து போக வேண்டாம். கர்த்தர் அன்றன்றைக்கு தேவையானதை உங்களுக்கு கொடுத்து நடத்தி வருகிறாரே அதற்காக முதலில் நன்றி சொல்லுங்கள்.

சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது. சங்கீதம் 34:10–ன் படி சின்ன காரியத்தில் கூட ஆண்டவர் நமக்கு குறை வைக்க மாட்டார். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலே ஏற்பட்ட உறுதியான அன்பு உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் தொடர்ந்து போஷித்துக் கொண்டே இருக்கும்.

3. வழிநடத்துவதில் அவரின் உறுதியான அன்பு (Steadfast love in His Guidance)

ஒரு ஊருக்கு புதிதாக செல்லும்பொழுது சரியான வழி தெரிந்திருக்கவேண்டும். ஒருவேளை பாதை மாறி சென்றுவிட்டால் உங்களால் அந்த இடத்திற்கு சரியாக போய் சேரமுடியாது. இந்த வழிநடத்துதல் பயணத்திற்கு மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கைக்கும் அதிக முக்கியமானது. அதேப்போல பிள்ளைகள் படிக்கும்பொழுது சரியான guidance கொடுக்க வேண்டும். பக்கத்து வீட்டு, எதிர்வீட்டு பிள்ளைகளைப் பார்த்து உங்கள் பிள்ளைகளை நடத்தக்கூடாது. உங்கள் குடும்பம், உங்கள் சூழல், உங்கள் பிள்ளையின் விருப்பம், திறமையை பார்த்து வழிநடத்த வெண்டும். சில நேரத்தில் மாம்சத்தின்படி பெற்றோர்களே தவறி விடுகிறார்கள். ஆனால் நம் பரம தகப்பன் தவறமாட்டார். என்னுடைய பிள்ளைகள் தவறிவிடக்கூடாது என்பதில் தேவன் எப்பொழுதும் கருத்தாய் இருப்பார். இந்த உலகத்தில் வாழும் அத்தனை மக்களையும் சரியாக வழி நடத்தக்கூடியவர் நம் பரம தகப்பன் மட்டுமே! உறுதியான அன்பிற்கு அடையாளமாக சரியான பாதையில் மக்களை நடத்திக்கொண்டு இருக்கிறார். தம் பிள்ளைகள் எங்கும் ஸ்தம்பித்து அப்படியே நின்றுவிடக்கூடாது என்பதில் அதிக அக்கறையாக இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் வனாந்தரத்தில் வழிநடத்தின விதம் மிகவும் ஆச்சரியமானது. அவர்கள் முன்னால் செங்கடல் பின்னால் பார்வோனின் சேனைகள் இவை இரண்டும் ஆண்டவரின் பார்வையில் அற்பமானது ஆகவே அவர்கள் முன்னால் இருந்த செங்கடலை இரண்டாக பிரித்து, அவர்கள் நடந்து செல்ல வசதியாக கடல் நடுவே ஒரு வெட்டாந்தரையை ஏற்படுத்தினார். அந்த வெட்டாந்தரையில் இஸ்ரவேல் ஜனங்கள் மட்டுமே நடந்து செல்ல முடிந்தது, எகிப்தியருக்கு அது மீண்டும் கடலாக மாறியது. தேவன் தம் அன்பை தம் சொந்த ஜனங்களுக்கு மட்டுமே காட்டினார். அவர்கள் வணங்கா கழுத்துள்ளவர்கள். இருப்பினும் அவர்கள் மேல் தம் இரக்கத்தை வைத்திருந்தார். பகலில் மேக ஸ்தம்பம். இரவில் அக்கினி ஸ்தம்பம். பகலில் வெளிச்சம் இருக்கும். அந்த வெயில் அவர்களை தாக்காதபடி காக்க மேக ஸ்தம்பமாக பகல் முழுக்க வந்தது. இரவில் பாதை மாறி எங்கும் சென்று விடக்கூடாது என்பதற்காக அருமையான அக்கினி ஸ்தம்பம் இரவில் வந்தது. இன்னும் ஆச்சரியமான காரியம் என்னவென்றால் அவர்கள் ஆடைகள் பழசாகவில்லை. காலில் அணிந்துள்ள செருப்பு கூட தேய்ந்து போகவில்லை. எவ்வளவு அன்புள்ள தேவன் பார்த்தீர்களா?

நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். சங்.32:8–ன்படி நீங்கள் நடக்க வேண்டிய வழியை அவர் காட்டுவார். உங்களுக்கு சரியானவற்றை போதித்து நடத்துவார். நீங்கள் ஆண்டவரிடம் கேட்க, பேசி, பழக கற்றுக்கொள்ள வேண்டும். அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான்

நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும், உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். சங். 143:8 அதிகாலையில் அவரை தேடும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் ஆண்டவரிடம் நான் என்ன செய்ய வேண்டும் எங்கு செல்ல வேண்டும் என கேட்க வேண்டும். அப்பொழுது அவருடைய அனந்த ஞானத்தின்படி உங்களை நேர்த்தியாக வழி நடத்துவார்.

தேவனே, உம்முடைய உறுதியான அன்பு என்னை வழிநடத்த வேண்டும் என நீங்கள் கேட்கும்பொழுது அற்புதமாக உங்களை வழிநடத்தி பாதுகாப்பார். வழிநடத்தும் வல்ல தேவன் உங்கள் வாழ்வின் நாயகனாக இருந்து நித்தமும் நடத்த வல்லவராயிருக்கிறார். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி,... (ஏசா.58:11)

4. அழைப்பில் அவருடைய உறுதியான அன்பு (Steadfast love in His Call)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை அழைக்கிறார். என் மகனே, என் மகளே என்னிடம் வா என அன்போடு அழைக்கிறார். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத்.11:28–ல் எல்லாருக்கும் உரிய பொதுவான ஒரு அழைப்பை ஆண்டவர் தருகிறார். Open Invitation என சொல்லலாம். நான் உனக்கு ஓய்வு தருவேன், நான் உனக்கு ஜெயத்தை தருவேன், நான் உனக்கு சமாதானத்தை தருவேன், நான் உனக்கு மகிழ்ச்சி தருவேன், நான் உனக்கு ஆசீர்வாதத்தை தருவேன் என சொல்கிறார். இது எல்லாருக்கும் உரிய ஆசீர்வாதம். எந்த விதமான பாகுபாடும் இல்லை. ஜாதி, மதம், இனம், பண்பாடு என்ற வித்தியாசம் இல்லை. எந்த நாட்டை சேர்ந்தவராக இருந்தாலும் இந்த அழைப்பு எல்லாருக்கும் உரியது. தேவனிடம் எந்த பட்சபாதமும் இல்லை.

இந்த அழைப்பு சில நேரங்களில் பிரத்யேகமாய் கிடைக்கும். உதாரணமாக பேதுருவைக் குறித்து பார்க்கலாம். இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். லூக்கா 5:10 பேதுருவே, இத்தனை நாட்களாக நீ மீன் பிடிக்கிறவனாய் இருந்தாய். இனிமேல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய் என அழைப்பு கொடுக்கிறார். இயேசுவின் இந்த தனிப்பட்ட அழைப்பு மீன் பிடித்தவனை மனுஷரை பிடிக்கிறவனாக மாற்றுகிறது. அவன் இயேசுவோடு கூட இருந்தான். இயேசு சிலுவை சாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதைக் கண்டு, அழைப்பை பெற்ற பேதுரு பின் வாங்கிப் போனான். இயேசுவை தெரியாது என மறுதலித்துவிட்டான். ஆனால் இயேசு அவனை கைவிடவில்லை. மீண்டும் அவனுக்கு ஒரு encounter நடக்கிறது. அதாவது மீண்டும் ஒரு வாய்ப்பை ஆண்டவர் கொடுக்கிறார்.

இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். யோவான் 21:15–17 வரை வாசிக்கும்பொழுது மற்ற சீஷர்களைவிட நீ என்னை நேசிக்கிறாயா? என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என ஒரு பொறுப்பை கொடுக்கிறார். அவன் மூன்று முறை மறுதலித்த காரணத்தினால் இங்கு மூன்று முறை நீ என்னை நேசிக்கிறாயா என இயேசு கேட்கிறார். ஆண்டவர் சில சிட்சைகளை உடனே எடுப்பார், சில சிட்சைகளை எடுக்க கொஞ்ச நாள் ஆகும். ஏனென்றால் பேதுருவைப்போல நாமும் சில

தவறுகள் செய்திருப்போம். அவற்றை நாம் அறிக்கை செய்யாதபட்சத்தில் அவை நிவிர்த்தி ஆகாது. "நீ என்னை நேசிக்கிறாயா" என ஆண்டவர் மூன்றாம் முறை கேட்டபொழுது பேதுரு துக்கப்பட்டான். இது அவன் வாழ்வில் ஒரு திருத்தத்தை கொண்டு வந்த நேரமாக இருந்தது. பேதுரு இயேசுவை எனக்கு தெரியாது என மூன்று முறை மறுதலித்தான். இயேசுவின் கனிவான ஒரு பார்வை அவன் வாழ்வை மாற்றியது. அந்த பார்வையில் குத்துண்டவனாக மனங்கசந்து அழுதான். கடைசியில் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்ற ஆண்டவரின் குரலுக்கு செவிசாய்த்தான். பேதுரு இயேசுவைப் பார்த்தான். இயேசு பேதுருவைப் பார்த்தார். அந்த நேரம் இயேசுவின் பார்வையில் ஏற்பட்ட அதிர்வுகளில் பேதுரு மனம் கசந்து அழுதான்.

ஒரு சமயம் இயேசு சீஷர்களை நோக்கி, நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வ தில்லை மத்.16:15–18. என் ஆடுகளை மேய்க்க அவன்தான் சரியான ஆள் என தெரிந்தெடுத்து அவன் கையில் மிகப்பெரிய பொறுப்பை கொடுத்தார். இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என திருச்சபைக்கு தலையாக பேதுருவை உயர்த்தினார்.

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவிடம் மட்டும்தான் உறுதியான அன்பு உண்டு. முதலாவது அந்த அன்பு உங்களை மீட்கும். இரண்டாவது அந்த உறுதியான அன்பை காட்டுகிற தெய்வம் உங்களை ஒவ்வொரு நாளும் போஷிப்பார். மூன்றாவதாக ஒவ்வொரு நாளும் உங்களை சரியாக வழி நடத்துவார். கடைசியாக அந்த உறுதியான அன்பினால் உங்களையும் தம் மந்தையை மேய்க்கும்படி அழைப்பை தருவார். அந்த அழைப்பு அனைவருக்கும் உரியது. ஒரு சிலருக்கு பிரத்தியேக அழைப்பாக (Specific call) இருக்கும். ஒரு சிலருக்கு பொதுவான அழைப்பாக (General call) இருக்கும்.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு சகோதர சகோதரிகளே, இயேசுவின் அன்பிற்கு பதிலாக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அவரில் உறுதியான அன்பு இருந்தால் மட்டுமே அவருக்காக ஓட முடியும், அவருடைய சித்தத்தை நிறைவேற்ற முடியும். இயேசுவை நேசிக்காத ஒருவன் அவருடைய மந்தையை நேசிக்க முடியாது. மந்தையை நேசிக்காதவன் மேய்ப்பனாக இருக்க முடியாது. இயேசுவின் மேல் அன்பில்லாத வன் நிச்சயமாக ஆடுகளுக்காக பரிதபிக்க முடியாது.

பேதுருவைப் போல பின்வாங்கிப் போனாலும் இயேசுவின் அந்த உறுதியான அன்பு உங்களை நோக்கி வரும். நீங்கள் தடுமாற்றத்தில் இருந்தாலும், வழிவிலகிப்போனலும் இயேசுவிடம் திரும்பி வாருங்கள். அவரின் உறுதியான அன்பிற்கு இணையான ஒரு அன்பு இந்த உலகத்தில் எங்குமே இல்லை. அந்த அன்பிற்கு நிகர் எதுவும் இல்லை. அவருடைய அன்பு மாறாதது, ஆனால் நாம் மாறுகிறவர்கள். மாறாத அன்பை உறுதியாக பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை உயர்த்து வார். உங்களை ஆசீர்வதிப்பார்.

joshua@mojindia.org

Telugu Whats App No.
+ 91 91770 87860

2024 செப்டம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர். (யாத்தி.15:13)

02 கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார். (உபா.32:12)

03 மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப் போல வழிநடத்தினீர். (சங்.77:20)

04 அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள். (எபே. 1:14)

05 நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது. (ஏசாயா 63:4)

06 பகலிலே மேகத்தினாலும், இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழி நடத்தினார். (சங்.78:14)

07 கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பி வருவார்கள். (சங்.51:11)

08 உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழி நடத்தினீர். (யாத்தி.15:13)

09 கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். (எரே.31:11)

10 நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார். (சங்.34:17)

11 என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன், என் பாதைகள் உயர்த்தப்படும். (ஏசா.9:11)

12 உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும். (சங்.31:3)

13 நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும். (நீதி.11:21)

14 உமது பிரியர் விடுவிக்கப்படும் பொருட்டு, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். (சங்.108:6)

15 விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 52:3)

16 நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். (சங்.34:19)

17 உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள். (யாத்தி.6:7)

18 எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன். (அப்போஸ்.7:34)

19 அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழிநடத்தினார்; அவர்கள் சத்துருக்களைக் கடல் மூடிப்போட்டது. (சங்.78:53)

20 நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான். (நீதி.11:8)

21 பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும். (ஏசாயா 49:25)

22 கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். (சங்.34:7)

23 ....நித்திய வழியிலே என்னை நடத்தும். (சங்.139:24)

24 இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6)

25 தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். (சங்.107:28)

26 உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்: (ஏசாயா 49:25)

27 உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. (சங்.143:10)

28 அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். (தானி.3:17)

29 ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார். (ஏசாயா 19:20)

30 அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். (தானி.12:1)

ஜனகம் வாரங்கல்

ஆசீர்வாத நற்செய்தி கூட்டங்களின் எதிரொலி

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16: 15) (மத்தேயு 9: 35 - 38) (1 கொரி. 1: 18)

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், உங்கள் ஜெபத்தினாலும் கடந்த மாதத்தில் விசேஷமாக வாரங்கல், ஜனகம் ஆகிய இடங்களில் கூட்டங்கள் ஒழுங்கு செய்ய கர்த்தர் உதவி செய்தார்.

இரண்டு நாட்களும் அந்த இடங்களில் ஓயாத கனமழை பெய்து கொண்டிருந்தது. இருப்பினும் அநேக மக்கள் வந்து கூட்டங்களில் கலந்து கொண்டனர். ஜனகம் என்னும் பட்டணத்தில் விசுவாசத்தோடு வந்த மக்களுக்கு நானும், என் மகள் Dr. ஜேன் ஜாஷ்வா அவர்களும் கொடுத்த தேவ செய்தியையும், தீர்க்கதரிசனங்களையும் மிகுந்த அமைதியோடும் வாஞ்சையோடும், அர்ப்பணிப்போடும் கேட்டார்கள். கூட்டம் மாலை 4.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 9.30 மணிக்கு முடியும் வரை ஒருவரும் இடத்தைவிட்டு எழுந்து செல்லவில்லை. அது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை தந்தது. கொட்டும் மழையிலும் தேவனுடைய வார்த்தை ஆவியோடும், வல்லமையோடும், அற்புதங்களோடும் வந்தபடியால் தேவனை துதிக்கிறோம்.

இயேசுவின் நாமத்தில் பேய்கள் ஓடின, பலத்த அற்புதங்கள் நடைபெற்றன. நாங்கள் இருவரும் கூறின தீர்க்கதரிசன வார்த்தைகள் வந்திருந்த மக்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், புதிய நம்பிக்கையையும் கொண்டு வந்தது. அநேகர் தங்களை கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தார்கள். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

வாரங்கல் பகுதியில் நடைபபெற்ற கூட்டத்திற்கும் அநேக மக்கள் வந்து கலந்து கொண்டார்கள். இந்த கூட்டங்களை ஒழுங்கு செய்த பாஸ்டர் ராஜ் மற்றும் பாஸ்டர் பிரான்சிஸ் இருவருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இரண்டு பாஸ்டர்களுடைய தாழ்மையும், விடா முயற்சியும், தன்னலமற்ற எண்ணமும் எங்களை மிகவும் கவர்ந்தது.

பல்வேறு ஆலய ஆராதனைகளில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கலந்துக்கொண்ட கூட்டங்களின் விபரங்கள்

1. ஊட்டியில் உள்ள CSI Wesly ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள்.

2. நாகர்கோவிலில் உள்ள Pentecostal Church–ல் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கலந்துக்கொண்டு தேவ செய்தி அளித்தார்கள்.

3. கன்னியாகுமரியில் உள்ள Bethel Church-ல் நடைபெற்ற ஆராதனையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள். Pr.Godfrey அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

4. பெங்களூரில் உள்ள Trinity Full Gospel Worship Center-ல் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கலந்துக்கொண்டு தேவ செய்தி அளித்தார்கள். Pr. Linton Rajesh அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

5. பாண்டிச்சேரியில் உள்ள A.G.Main Church-ல் நடைபெற்ற ஆராதனையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள்.

20.07.2024 வாரங்கல் கூட்டத்தில்



பெங்களூர் கூட்டத்தில்

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கூட்டங்களின் விபரங்கள்

ஆகஸ்ட் 11-ம் தேதி திருநெல்வேலியில் விடுதலையின் ஆசீர்வாத ஜெபக்கூட்டம் நடைபெற்றது. ஆகஸ்ட் 15-ம் தேதி செகந்திராபாத்தில் அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம் நடைபெற்றது. ஆகஸ்ட் 18-ம் தேதி மதுரையில் குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் தனிஜெபம் நடைபெற்றது. ஆகஸ்ட் 24 ஆம் தேதி வள்ளியூரிலும், ஆகஸ்ட் 25 ஆம் தேதி திருவனந்தபுரத்திலும் கூட்டங்கள் நடைபெற்றது. நம்முடைய பங்காளர்கள் அனைவரும் உற்சாகமாய் வந்து கலந்துக்கொண்டார்கள்.

அன்பரின் ஊழியத்தைக் குறித்து அறிந்து முதன் முறையாக வந்த தேவ பிள்ளைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். நம்முடைய கூட்டங்களின் இறுதியில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும். திருமண வாழ்க்கையில் மனமுடைந்துப்போன பெண்கள், ஆண்கள், நோயினால் பல வருடங்களாக துன்புறுகிற மக்கள், பல்வேறு காரணங்களால் வாழ வழி தெரியாமல் கஷ்டப்படுகிற வாலிப பிள்ளைகள் அனைவருக்கும் கிறிஸ்துவின் மனதுருக்கத்துடன் ஆறுதல்படுத்தி ஜெபித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டங்களை நடத்துவதற்கான தேவைகள் ஒவ்வொரு மாதமும் பல இலட்சங்களாக இருக்கிறது. இதற்காக ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். வெளி மாநிலங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கூட்டங்களை நடத்துவதற்கான ஹால் மற்றும் மண்டபத்திற்கான செலவு, பயணச்செலவு, நோட்டீஸ், பேனர், விளம்பரச் செலவுகள் மற்றும் இதரச் செலவுகள் என ஏராளம் இருக்கிறது. ஆகவே அன்பு பங்காளர்கள் மேற்கண்ட செலவுகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் தாங்குவதற்கு முன்வாருங்கள். நம் கூட்டங்களின் வாயிலாக சந்திக்கப்படுகிற ஆத்துமாக்களை கர்த்தர் உங்கள் கணக்கில் நிச்சயம் எடுத்துக்கொள்வார். இம்மையிலும் மறுமையிலும் நிறைவான பலனைத் தருவாராக!

சுவிசேஷ கூட்டங்களை தாங்குவதற்கான விபரங்கள்

சுவிசேஷ கூட்டங்கள் நடத்த உங்களால் முடிந்த தொகை Rs.10,000/- அல்லது Rs.25,000/- அல்லது Rs.50,000/- அல்லது Rs.1,00,000/- என கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர் நிச்சயமாக அதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக உங்களுக்கு தந்து உங்களை ஆசீர்வதிப்பார்.
அலைபேசி எண்: 8098742638 (காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரை)

MINISTRY OF JESUS
A/C NO. 10848474869 || IFS code: SBIN 0000930
State Bank Of India,Cantonment, Trichy Main Branch

9500487061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google Pay, Paytm, PhonePe etc.) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக்கணக்கிற்கு காணிக்கை அனுப்பலாம்.

Praise Report
துதி அறிக்கை

அற்புத சுகம் பெற்றோம்!

ஆண்டவரின் கிருபையினால் எனக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தார்கள். என் மகள் 6-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தப் பொழுது சரீர பெலவீனம் ஏற்பட்டு மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தாள். அந்த நேரத்தில் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் மகளுக்கு அற்புத சுகத்தை தந்தார். தற்பொழுது மகள் மருத்துவராக பணிசெய்துக்கொண்டு இருக்கிறாள்.

எனக்கு கடுமையான வயிற்று வலி இருந்தது. அதற்கான சிகிச்சைகள் எடுத்தும் சுகம் பெறவில்லை. ஒரு முறை **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை நேரில் சந்தித்து எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அன்றிலிருந்து எனக்கு வயிற்றுவலியே இல்லை. அற்புத சுகத்தைக் தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன். ஐயா மற்றும் குடும்பத்தினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். **– திருமதி. பிரேமலதா, ஈரோடு.**

என் மகனுக்கு கர்த்தர் இரங்கினார்!

என் மகன் கடந்த வருடம் 10-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தப் பொழுது இரண்டு மாதங்களாக பள்ளிக்கூடத்திற்கு செல்லவே இல்லை. படிக்க முடியாது என கூறிவிட்டான். அதனால் நாங்கள் அனைவரும் வேதனை அடைந்தோம். அந்த நேரத்தில் நான் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என் மகனைக்குறித்து சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்துவிட்டு "பயப்படாதே, உன் மகன் பள்ளிக்கு செல்வான்," என சொன்னார்கள். கர்த்தர் ஐயா மூலம் சொன்ன இந்த வார்த்தையை மட்டும் நான் உறுதியாக பிடித்துக்கொண்டேன். அதன்பின் மகன் பள்ளிக்கு ஒழுங்காக சென்றான். 10-ம் வகுப்பு தேர்வில் 308 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற கர்த்தர் இரங்கினார். என் கணவர் கிறிஸ்துவை அறியாதவர், என் மகன் தேர்வில் வெற்றியடைந்ததைப் பார்த்து, கர்த்தர் தான் மகனுக்கு உதவி செய்தார் என அறிக்கை செய்தார். என் கணவருக்கு ஆண்டவர் மீது நம்பிக்கை வந்ததற்காகவும், மகன் தேர்வில் வெற்றி பெற்றதற்காகவும் கர்த்தரை துதிக்கிறேன்.

– திருமதி. சுலோச்சனா, ஒரத்தநாடு.

பொருத்தனை ஜெபத்தைக் கேட்டார்!

நான் அன்பரின் ஊழியத்தில் 15 வருடமாக பங்காளராக இருக்கிறேன். என் கணவருக்கு வயது 80 ஆகிவிட்டது. கடந்த வருடம் திடீரென பெலவீனப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்தார். அந்த நேரத்தில் நான் ஆண்டவரிடம் ஒரு பொருத்தனை செய்தேன். என் கணவர் சுகமாகி வேலைக்கு சென்றால் அந்த வருமானத்தில் அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை தருகிறேன் என ஜெபித்தேன். ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்டார். என் கணவருக்கு ஆயுசு நாட்களை கூட்டிக் கொடுத்தார். இப்பொழுது வேலைக்கு செல்லவும் தேவையான பெலனை தந்துள்ளார். அந்த வருமானத்திலிருந்து ஊழியத்திற்கு என்னுடைய பொருத்தனை காணிக்கையை தருகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

– திருமதி. தெபொராள், புதுக்கோட்டை.

மகளுக்கு இரட்டிப்பான ஆசீர்வாதம் கிடைத்தது.

ஐந்து வருடத்திற்கு முன்பு 97 வயது நிரம்பிய பாளையங் கோட்டையை சேர்ந்த ஒரு அம்மா அன்பரின் ஊழிய பங்காளராக இருந்தார்கள். அவர்கள் கூட்டத்திற்கு வருவதற்கு உதவியாக நானும் அவர்களோடு இணைந்து வந்தேன். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் அந்த அம்மாவிற்காக ஜெபித்தார்கள். அதன்பின் எனக்காக ஜெபிக்கும்பொழுது, தீர்க்கதரிசனமாக, "உன் மகளுக்கு வேலை கிடைத்து திருமணம் நடக்கும்" என சொன்னார்கள். அந்த வார்த்தையின்படியே என் மகளுக்கு திருவனந்தபுரத்தில் வேலை கிடைத்தது. அதன்பின் திருநெல்வேலியை சேர்ந்த நல்ல மாப்பிள்ளை கிடைத்து திருமணம் மிகச்சிறப்பாக நடந்து முடிந்தது. இப்பொழுது மகள் கர்ப்பமாக இருக்கிறாள். தேவனுக்கே மகிமை!

– திருமதி. சுந்தரி, திருநெல்வேலி.

அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

facebook

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

Youtube

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

Twitter

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

Instagram

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org
www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

ஊழியத்தை தாங்குகிற பங்காளர் வாழ்வை ஆசீர்வதித்த கர்த்தர்

நான் அன்பரின் ஊழியத்திற்கு என்னால் முடிந்த சிறு காணிக்கையை மாதந்தோறும் கொடுத்து தாங்கி வருகிறேன். அதனால் ஆண்டவர் எனக்கு மருத்துவ செலவு எதுவும் வராதபடி அற்புதமாக பாதுகாத்து வருகிறார். கடந்த வருடம் பொருத்தனை காணிக்கையை கொடுத்து ஊழியத்தை தாங்குவதற்கு கர்த்தர் உதவி செய்தார். அதன்பின் நாங்கள் எதிர்பார்த்திராத நேரத்தில் 10 பவுன் நகை வாங்குவதற்கு கர்த்தர் ஒத்தாசை செய்தார். பிள்ளைகள் படிப்பை ஆசீர்வதித்திருக்கிறார், என் வேலையில் இருந்த பிரச்சனைகளையும் நீக்கி கர்த்தர் மேன்மையாக வைத்திருக்கிறார்.

என்னுடைய இரண்டு தம்பிகளும் மரண போராட்டத்தினால் அதிகம் கஷ்டப்பட்டார்கள். அந்த நேரத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா** ஐயா அவர்கள் பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே அவர்களை மரண போராட்டத்திலிருந்து அற்புதமாக விடுதலையாக்கி இன்று வரை ஜீவனோடும் சுகத்தோடும் பாதுகாத்து வருகிறார். கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். எங்கள் குடும்பத்தை நேசித்து எங்களுக்காக ஜெபிக்கிற ஐயாவிற்கும் குடும்பத்தினருக்கும் எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.

– திருமதி. மணிமேகலை, தஞ்சாவூர்.

மரண கண்ணிகள் நீங்கியது!

என் வாலிப நாட்களில் கர்த்தரை நான் ஏற்றுக்கொண்டேன். முதன்முறையாக நான் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்தப்பொழுது, என்னை "மகனே" என அழைத்தார்கள். எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. ஏனென்றால் அந்த நாட்களில் என் தந்தையை இழந்து நான் மிகுந்த துக்கத்துடன் இருந்தேன். அன்றைக்கு மகன் போல நேசித்த ஐயா அவர்கள் இன்றுவரை அதே நேசத்துடன் என்னை அன்பு செய்து வருகிறார்கள். என் வாழ்வின் பல நேரங்களில் நான் பட்ட பாடுகள், கஷ்டங்கள் மத்தியில் எனக்காக, என் மனைவி பிள்ளைகளுக்காக ஐயாவும் குடும்பத்தினரும் ஜெபித்தார்கள். அதனால் மரண கண்ணிகளுக்கு தப்பி இன்று நாங்கள் அனைவரும் நல்ல சுகத்துடன் வாழ கர்த்தர் கிருபை செய்துள்ளார். தற்பொழுது வீடு கட்டுவதற்கும் கர்த்தர் ஒத்தாசை செய்தார். தேவனுக்கே மகிமை! சிறிதும் தகுதியற்ற எங்களை நேசித்து வருகிற ஐயா குடும்பத்திற்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

– திரு. ஜெரால்ட், கன்னியாகுமரி.

Tamil Whats App No.
+ 91 95004 87059

Malayalam Whats App No.
+ 91 94889 32937

பேரப்பிள்ளைகள் நன்றாக படிக்கிறார்கள்

எங்கள் பேரப்பிள்ளைகள் ஜெர்வின், ஜெர்லின் இருவரும் படிப்பில் ஆர்வம் இல்லாமல் இருந்தார்கள். அன்பரின் ஊழியத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு அவர்களை அழைத்து வந்து ஜெபித்து சென்றேன். அதன்பிறகு பேரப்பிள்ளைகள் நன்றாக படிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுக்குள் நல்ல மாற்றத்தை தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

சென்னையில் வசிக்கும் எங்கள் உறவினரின் மகன் கணேஷ் இரண்டு நாட்களாக வயிற்றுவலியினால் கஷ்டப்பட்டான். ஸ்கேன் செய்து பார்த்தப்பொழுது சிறுநீரகத்தில் கல் என்று மருத்துவர் கூறினார். அவனுக்கு சுகமானவுடன் அன்பரின் ஊழியத்தில் சாட்சி எழுதுகிறேன் என பொருத்தனையுடன் ஜெபித்தேன். அந்த நாளிலே கல் தானாக விழுந்து விட்டது. இப்போது நன்றாக இருக்கிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

– திருமதி. மேரி ஸ்டெல்லா, புள்ளம்பாடி.

பரிபூரண சுகம் கிடைத்தது!

பலவருடங்களாக எனக்கு மாதந்தோறும் கடுமையான வயிற்றுவலி வந்துவிடும். அந்த நேரத்தில் வலிதாங்க முடியாமல் இறந்து விடலாம் என நினைத்து இருக்கிறேன். அந்த அளவிற்கு எனக்கு பயங்கரமான வலி இருந்தது. ஜுன் மாதத்தில் செகந்திராபாத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வயிற்றுவலியுடன் தான் வந்தேன். ஜெப நேரத்தில் Dr. **ஜேன் ஜாஷ்வா** அவர்கள் தீர்க்கதரிசனமாக என்னை அழைத்து என் பிரச்சனைகளை சொல்லி எனக்காக ஜெபித்து அனுப்பினார்கள். அப்பொழுதே வலி நீங்கியது. அதன்பிறகு எனக்கு வயிற்றுவலியே வரவில்லை. பரிபூரண சுகத்தை கொடுத்த கர்த்தரை துதிக்கிறேன்.

– சௌமியா, ஹைதராபாத்.

ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy
IFSC Code : TMBL 0000019
A/c Type : Current

மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy Main Branch
IFSC Code : SBIN 0000930
A/c Type : Current

WE'RE HIRING

Trichy



ACCOUNTANT

(B.com. / M.com. Graduates)
Skills Required: Tally ERP 9

DATA ENTRY OPERATORS

(Any UG / PG Candidates)
Skills Required: Good In Computing Skills

CORRESPONDENCE

(Any UG / PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil, English, Telugu)

SOCIAL MEDIA EXECUTIVE

(Any UG / PG Candidates)
Skills Required: Good in social Media
Platforms, Good in English & Tamil

VIDEO EDITORS

(Any UG / PG Candidates)
Skills Required: able to work in
Adobe Premiere Pro & After Effects

GRAPHIC DESIGNERS

(Any UG / PG Candidates)
Skills Required: able to work in
Adobe photoshop & Illustrator

CAMERAMAN

with adequate Experience

DRIVERS-*URGENT NEED*) COOK, HOUSE KEEPERS

Christians Preferred
Apt Remuneration will be paid

Apply to: ministryofjesushr@gmail.com

S.J.SAVES TRUST

நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

கடந்த ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி சேலம் மாவட்டம் மேட்டுபட்டியில் உள்ள வெள்ளாளகுண்டம், சேஷன்சாவடி, எம்.பெருமாபாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள கணவரை இழந்த கைம்பெண்களுக்கு **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் மளிகை பொருட்களை வழங்கினார்கள்.

ஊனமுற்றோர், ஆதரவற்றோர், உடல்நலம் குன்றியோர் மற்றும் ஏழை சிறுவர்கள் 100 பேருக்கு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் உதவிகள் செய்தார்கள். உதவி பெற்ற மக்களில் ஒரு சிலர், கை, கால்கள் செயலிழந்தோர், பார்வையற்றோர், மனநலம் குன்றிய சிறுவர்கள், காது கேளாதோர், T.B.நோய், சிறுநீரக பாதிப்புக்கு உள்ளானவர்கள் ஆவர். அத்தியாவசிய உணவு பொருட்கள், மருந்துகள் (ஊட்டசத்து) ஆகியவை வழங்கப்பட்டது.

மேலும் சிறுவர்களுக்கு தேவையான பள்ளி உபகரணங்கள் நோட்டுகள், தண்ணீர் பாட்டில், உணவு, அத்தியாவசிய மருந்துகள் (ஊட்டசத்து, சளி, காய்ச்சல்) ஆகியவற்றை நமது ஸ்தாபகர் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் நேரில் வழங்கினார்கள். அத்துடன் அவர்களுக்கு தேவையான நல்ல மனநல ஆலோசனைகளையும் கூறினார்கள்.

நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. (நீதி. 3:27)

நன்மை செய்யப் படியுங்கள், நியாயத்தைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள். (ஏசாயா 1:17)

இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். (மத்தேயு 18:5)

இதில் கலந்துகொண்ட பயனாளிகளைப்பற்றிய சில தகவல்கள்.

- 6 வயது சிறுவனான அசோக்கிற்கு இரண்டு கண்களிலும் பார்வை குறைவு ஏற்பட்டு படிக்க முடியாத நிலையில் இருக்கிறான். சிறுவனின் பெற்றோர் ஏழ்மை நிலையில் இருப்பதால் அதற்கான மருத்துவ செலவுகள் செய்ய முடியவில்லை.

- 27 வயதான விஜயலட்சுமி என்ற பெண்ணிற்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. இரு வருடங்களுக்கு முன்பே கணவர் நோய்வாய்பட்டு இறந்த நிலையில் அந்த பெண் தனக்கு எந்தவித ஆதரவும் இல்லாததால் கூலி வேலைக்கு சென்று பிள்ளைகளை காப்பாற்றும் நிலையில் வாழ்கிறார்கள்.

- 40 வயது உடைய தம்பதியினர் வெள்ளாளகுண்ட பகுதியில் வசித்து வருகிறார்கள். இவர்கள் இருவருமே மாற்றுத்திறனாளிகள். இதில் கணவர் முருகேஷ் வயது 42, இவருக்கு இரண்டு கால்களுமே செயல்படவில்லை. மனைவி காஞ்சனா 38 வயது இவர்களுக்கும் இரண்டு கால்கள் மற்றும் கைகள் செயல்பட வில்லை.

- ஒன்றரை வயது குழந்தை தர்ஷனாவிற்கு Cerebal Palsy சரீர வளர்ச்சி இல்லை. 7 கிலோ எடையில் பச்சிளம் குழந்தையாக காணப்படுகிறாள். தாய் தகப்பன் வறுமையின் காரணமாக மருத்துவ முயற்சிகளே மேற்கொள்ளவில்லை. காது கேட்காது, கண்களில் பார்வை குறைவு, தவழ முடியாது, சத்தம் இல்லை. அரை உயிர் தான் உள்ளது.

- 18 வயதான லோகேஷ் என்ற வாலிபனுக்கு சிறு வயதிலிருந்து மனவளர்ச்சி இல்லாததால் தானாகவே சிறுநீர் மற்றும் மலம் வெளியேறுகிற நிலைமை. இவரது பெற்றோர் கூலி தொழிலாளிகள். எனவே இவர் மருந்து செலவுக்கு மாத்திரை வாங்க கூட பணம் இல்லாததால் நமது முகாமிற்கு வந்தனர்.

அசோக்

லோகேஷ்

விஜயலட்சுமி

தர்ஷனா

40 வயது தம்பதியினர்

இவர்களைப் போன்று உடல் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட அநேகர் வந்திருந்தனர். S.J.Saves Trust அறக்கட்டளை மூலம் அனைத்து உதவி களையும் பெற்றுக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றனர்.

பிரியமான தேவ ஜனமே! நமது டியுஷன் சென்டர் வாயிலாக பிள்ளைகளுக்கு மாலை வகுப்புகளை நடத்தி, இரவு உணவு கொடுத்து, பள்ளிக்கு தேவையான உபகரணங்களை வழங்கி வருகிறோம். ஒரு பிள்ளைக்கு மாதம் Rs.1100/- செலவாகிறது. இதுவரைக்கும் 250 பிள்ளைகளுக்கு உதவி செய்துள்ளோம். இன்னும் 250 குழந்தைகள் உதவிகள் வேண்டி காத்திருக்கிறார்கள். மழை காலம் என்பதால் அனைவருக்கும் குடை வாங்கித் தர வேண்டும். எனவே, இதை மனதில் கொண்டு ஜெபித்து, உங்களால் இயன்ற உதவிகளை செய்யும்படி மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்கிற பங்காளர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

உலக செய்திகள்

நாம் கொரோனா பெருந்தொற்றில் இருந்தே இப்போதுதான் நீண்ட போராட்டத்திற்குப் பிறகு மீண்டுள்ளோம். இதற்கிடையே இப்போது மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மங்கிபாக்ஸ் பரவ தொடங்கியுள்ளது. முதல் முறையாக ஸ்வீடன் நாட்டில் மங்கி பாக்ஸ் கண்டறியப்பட்டுள்ள நிலையில் பாகிஸ்தான் நாட்டிலும் 3 பேருக்கு மங்கிபாக்ஸ் உறுதியாகியுள்ளது. இது உலகநாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சமீப ஆண்டுகளாகவே உலகில் திடீர் திடீரென புது புது வைரஸ் பாதிப்புகள் பரவி வருகிறது. கடைசியாக 2019ல் வெடித்த கொரோனா பெருந்தொற்று உலகை மொத்தமாகப் புரட்டிப் போட்டு விட்டது என்றே சொல்லலாம்.

ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ குடியரசில் தான் இப்போது மங்கிபாக்ஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து உலகசுகாதார அமைப்பு உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளது. ஏற்கனவே கடந்தாண்டு மங்கிபாக்ஸ் தொற்றுக்காக பொது சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்ட நிலையில் இப்போது தொடர்ச்சியாக 2வது முறையாக பொது சுகாதார அவசர நிலை அறிவிக்கப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிற்கு மனிதாபிமான அடிப்படையில் 1400 கிலோபுற்றுநோய் எதிர்ப்பு மருந்தை இந்தியா அனுப்பியுள்ளது. கடந்த மே மாதம், சிரியாநாட்டின் அதிபர் ஆசாத் மனைவி அஸ்மா புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சோதனைகளுக்குப் பிறகு அவருக்கு தீவிரபாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவில் புற்றுநோய்க்கான சரியான மருந்துகள் வேண்டும் என்று தெரியவந்தது. இதையடுத்து மனிதாபிமான அடிப்படையில் அந்நாட்டுக்கு புற்றுநோய் எதிர்ப்பு மருந்தை இந்தியா அனுப்பி உள்ளது.

வங்காள தேசத்தில் தியாகிகளின் குடும்ப வாரிசுகளுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதில் 400க்கும் மேற்பட்டவர்கள் உயிர் இழந்தனர். இதன் எதிரொலியாக பிரதமர் பதவி ராஜினாமா செய்த ஷேக் ஹசினா நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இதையடுத்து அங்கு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பலர் கொல்லப்பட்டதால் ஷேக் ஹசினா மற்றும் அவரது மந்திரி சபையில் இடம் பெற்று இருந்த மூத்த மந்திரிகள், பதவி நீக்கம் செய்யப்பட்ட போலீஸ் அதிகாரிகள் என 10 பேர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது. அவர்கள் மீது இனப்படுகொலை, சித்ரவதை உள்ளிட்டவை தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணையும் நடந்து வருகிறது. ஷேக் ஹசினாவிற்கு எதிராக எதிர்கட்சி தொடர்ந்து நடத்தி வரும் போராட்டம் மீண்டும் பதற்றத்தை அதிகரித்து இருக்கிறது. இதனிடையே ஷேக் ஹசினாவை நாடு கடத்துமாறு இந்தியாவிடம் கோரிக்கை வைப்பது தொடர்பாக விரைவில் முடிவு செய்யப்படும் என்று வங்காளதேச இடைக்கால அரசின் வெளியுறவுத்துறை மந்திரி தெரிவித்துள்ளார்.

திருச்சியில்

அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

செப்டம்பர் 28
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபமையம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 - 2741925

புத்தம் புதிய நிகழ்ச்சி

அனுதின அற்புதம்

DAILY MIRACLE

தினமும் காலை 5 மணி

MINISTRY OF JESUS

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து
நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக் காணலாம்.

அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

புதன்
மதியம் 12.00 – 12.30

வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV

வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST கேரளம்

சனி
இரவு 7.30 – 8.00

வங்கிக் கணக்குகளின் விபரம்

DR. ANANDA STIRA
A/C NO. 10848469699

ANBARIN OOZHIYAM
A/C NO. 10848559426

MINISTRY OF JESUS
A/C NO. 10848474869

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)

சமாதான தாபரத்தை கர்த்தர் எனக்கு தந்தார்!

என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும். ஏசாயா 32:18

என் பெயர் சரோஜா மேரி. 2011 முதல் 2018 வரை நாங்கள் குடியிருந்த வீடு, இடம், சூழ்நிலை சரியாக இல்லை. அருகில் உள்ளவர்களால் அதிக கஷ்டங்களை அனுபவித்தோம். அதிலிருந்து ஒரு விடுதலை வேண்டும் வேறு இடத்திற்கு செல்ல வேண்டும் என முயற்சி செய்தோம். ஆனால் எங்களால் முடியவில்லை. குடும்பத்தினரே அதற்கு தடையாக இருந்தார்கள்.

அந்த நாட்களில் டெலிவரன்ஸ் திருச்சபையில் மாதத்தின் முதல் தேதியில் அதிகாலை 6 மணிக்கு வாக்குத்தத்த ஆராதனையும், பரிசுத்த திருவிருந்தும் தவறாமல் நடைபெறும். நான் ஒரு வருடம் முழுவதும் அனைத்து மாதங்களிலும் உற்சாகமாய் வந்து அந்த ஆராதனையில் கலந்துக்கொண்டேன். பாடல், செய்தி, ஜெபம் அனைத்திலும் தேவ பிரசன்னம் இருப்பதை நன்றாக உணர்ந்தேன். ஆராதனையின் இறுதியில் நம்முடைய தனிப்பட்ட ஜெப விண்ணப்பங்களுக்காக ஒரு நிமிடம் ஜெபிக்கும்படி **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் அறிவுறுத்துவார்கள். அந்த நேரத்தில் என்னுடைய வீட்டின் பிரச்சனைக்காக நான் ஜெபித்தேன். பாஸ்டரும் அப்பொழுது எங்களுக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே ஜெபத்தைக் கேட்டார்.

2018-ம் அந்த ஆண்டின் இறுதியில் அந்த இடத்தை விட்டு வேறு ஒரு இடத்திற்கு நாங்கள் வீடுமாறிச் செல்ல ஆண்டவர் உதவி செய்தார். வீட்டை காலி பண்ணுகிற அந்த நாளிலும் அதிக போராட்டங்கள், மனஉளைச்சல்கள், சண்டைகள், சரீரபெலவீனம் ஏற்பட்டு வீட்டை காலி செய்ய முடியாதபடி சத்துரு தடையாக இருந்தான். முடிவில் கர்த்தருடைய ஆவியானவர் எனக்கு துணை நின்று சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றி, அந்த இடத்தை விட்டு சமாதானமாக புதிய இடத்திற்கு நாங்கள் செல்ல கர்த்தர் ஒத்தாசை செய்தார். இந்த அற்புதத்தை என்னால் மறக்க முடியாது. அந்த இடத்தை விட்டு வந்த பிறகு எங்கள் வாழ்க்கையில் தடையாய் இருந்த பல ஆசீர்வாதங்களையும் பெற முடிந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

– திருமதி. சரோஜா மேரி, திருச்சி.

விடுதலையின்

ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9.30 மணி - 11.30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள் | அனல் மூட்டும் தேவ செய்தி | உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்

10-வது குறுக்கு தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லை நகர், திருச்சி-620018.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

நாகர்கோவிலில்

செப்டம்பர் 7
சனிக்கிழமை

இடம் : விஜயதா திருமண மண்டபம்,
W.C.C. ரோடு, நாகர்கோவில்.

சென்னையில்

அக்டோபர் 2
புதன் கிழமை (அரசு விடுமுறை)

இடம் : BKN Skidmore Hall,
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி,
சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தியாளர்கள்

Dr. ஆனந்த ஸ்திரா & Mrs. மார்கிரேட் ஸ்திரா

குற்றாலத்தில்

சுகமளிக்கும் விடுதலைக் கூட்டம்

நாள்
செப்டம்பர் 15
(ஞாயிறு)

இடம்: CSI மறுரூப ஆலயம்,
ராக் ஹால், குற்றாலம்

நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

தேவ செய்தியாளர்கள்

Dr. ஆனந்த ஸ்திரா & Dr. ஜேன் ஜாஷ்வா

தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 – 2741925

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,